பெரியார் பல்கலைக்கழகம்
**PERIYAR UNIVERSITY**
NAAC A++ Grade - State University – NIRF Rank 56 - University State Rank 25
Salem – 636011, Tamil Nadu, India

**பதிவாளர்(மு.கூ.பொ.)** நாள்: 09.01.2026.

**No. PU/R/UEO/Elec./ Audio Facility/25F133376/024568/2026**

பெறுதல்

University Notice Board & University Website

அய்யா / அம்மையீர்,

பொருள்: பெரியார் பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள ஆட்சிப் பேரவைக் கூடம் – Audio Mixer மற்றும் Speaker உபகரணங்களை கொள்முதல் செய்வதற்கு – விலைப்புள்ளி கோருதல் – தொடர்பாக.

--oOo--

பெரியார் பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள ஆட்சிப் பேரவைக் கூடத்தில் (Senate Hall) கூட்டங்கள் மற்றும் காணொலிக் கருத்தரங்கம் நடத்துவதற்க்கு தேவையான Audio Mixer மற்றும் Speaker உபகரணங்களை அட்டவணையில் கண்டுள்ளவாறு கொள்முதல் செய்வதற்கு மூடி முத்திரையிடப்பட்ட விலைப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. விவரங்கள் பின்வருமாறு:

| Sl. No. | Particulars | Quantity | | Rate | Amount |
|---|---|---|---|---|---|
| 1 | SM Professional 8Ch Mixer (ORB 822 SC) | 01 | No | | |
| 2 | Speaker (ASX 912B Ahuja) | 04 | No's | | |
| | | | | **Total :** | |

**நிபந்தனைகள்:–**

1) **22.01.2026** அன்று மாலை 4 மணிக்குள் விலைப்புள்ளிகள் இவ்வலுவலகத்திற்கு வந்து சேரவேண்டும். அன்று மாலை 5 மணிக்கு விலைப்புள்ளிகள் திறக்கப்படும். காலதாமதமாகப் பெறப்படும் விலைப்புள்ளிகள் ஒரு போதும் ஏற்றுக்கொள்ளப்பட–மாட்டாது.

2) விலைப்புள்ளியிலுள்ள தொகைக் கண்டிப்பாக எண்ணிலும், எழுத்திலும் எழுதப் பட்டிருக்கவேண்டும். பெரியார் பல்கலைக்கழகப் பதிவாளர் குறிப்பிடும் இடத்தில் பொருட்களைக் கொண்டு வந்து சேர்க்கவேண்டும். விலைப்புள்ளியில் குறிப்பிடப்படும் தொகையானது வண்டிச்சத்தம், புகைவண்டிசத்தம், கட்டுமானச்செலவு, காப்பீட்டுக் கட்டணம் மற்றும் வரி ஆகியவற்றை உள்ளடக்கியதாக இருக்கவேண்டும்.

3) இந்த விலைப்புள்ளியின் உறையில் "**No. PU/R/UEO/Elec./ Audio Facility/25F133376/024568/2026**" என்று கண்டிப்பாக எழுதி பதிவாளர், பெரியார் பல்கலைக்கழகம், சேலம்–11, என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

4) விலைப்புள்ளியில் எந்தவொருதிருத்தமும் இருக்கக்கூடாது. அவ்வாறு திருத்தம் இருந்தால் அந்த இடத்தில் முறையான சான்றொப்பமிடவேண்டும்.

5) அனைத்து கடிதத் தொடர்புகளுக்கும் இந்த கடிதத்தில் குறிப்பிட்டுள்ள எண் மற்றும் நாளைக் குறிக்க வேண்டும்.

6) குறிப்பிடப்பட்டுள்ள விலை மதிப்பு ஆறு மாதம் வரை பொருந்தும்.

7) தேவைப்பட்டால் இறக்குமதி உரிமம் வழங்க வேண்டும்.

8) GSTIN எண் கட்டாயம் குறிப்பிட வேண்டும்.

9) PAN Number கண்டிப்பாகக் குறிப்பிடப் பட வேண்டும்.

**பதிவாளர்(மு.கூ.பொ.)**